(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2(16).]

# பாராளுமன்றத்தின்
# 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

**2025 நவம்பர் 15, சனிக்கிழமை வெளியிடப்பட்டது**

## 2025 நவம்பர் 21, வெள்ளிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆவது பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 ஒற்றோபர் 15 ஆம் திகதிய 2458/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.11.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்,— குடியியல் வான்செலவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6,8 மற்றும் 31 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 117(2) ஆம் பிரிவின் (ண) மற்றும் (த்) என்னும் பந்திகளின் கீழ் அப்போதைய போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 பெப்புருவரி 06 ஆம் திகதிய 2422/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.11.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்,— இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (ஓ) மற்றும் (த) என்னும் பந்திகளுடனும் பிரிவு 9 உடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 39 ஆம் பிரிவின் கீழ் அப்போதைய போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 பெப்புருவரி 06 ஆம் திகதிய 2422/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.11.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2025, நவம்பர் 26, புதன்ழமை)**

1628/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாகனங்களைப் புதிதாக பதிவுசெய்கையில், அரசாங்கத்தினால் இலக்கத்தகடுகள் வழங்கப்படுவதில் தாமதம் நிலவுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தாமதத்திற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) 2025.10.01 ஆம் திகதியாகும்போது, அரசாங்கத்தினால் இலக்கத்தகடு வழங்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) மேற்படி தாமதத்தை தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1629/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு தேசிய நூதனசாலையிலுள்ள அரும்பொருட்களைப் பாதுகாப்பதற்காக சரியான முறையியலொன்று இருக்க வேண்டுமென்பதையும்;

(ii) தேசிய நூதனசாலையிலுள்ள மிகவும் பெறுமதிமிக்க அரும்பொருட்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) கொழும்பு தேசிய நூதனசாலையின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக,

(i) 2025 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்;

(ii) 2026 ஆம் ஆண்டில் செலவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் நிதி எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1654/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அமைச்சின் கீழ் 'பசுமை தும்பர நக்கிள்ஸ் கருத்திட்டம்' மற்றும் 'தும்பர பசுமை வலுவூட்டல் கருத்திட்டம்' என இரண்டு கருத்திட்டங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) நக்கிள்ஸ் மலைத் தொடரைச் சுற்றியுள்ள நீர்நிலைகள் மற்றும் வடிநிலங்களைப் பாதுகாப்பதற்காக 'பசுமைக் காலநிலை நிதியம் (GCF)' மற்றும் 'சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் (IUCN)' ஆகியவற்றின் மூலமாக நிதியுதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், நிதியுதவிகள் மற்றும் உதவிகள் வழங்கப்பட்ட கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் ஊடாக வழங்கப்பட்ட நிதியுதவிகள், வரையறுக்கப்பட்ட மகாவலி கன்சல்டன்சி பியூரோ (தனியார்) நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி நிதியின் அளவு மற்றும் வழங்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(vi) மேற்படி நிதியைச் செலவு செய்து மேற்கொண்ட பணிகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி பணிகளின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்திற்கு மேலதிகமாக, (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கருத்திட்டங்களால் இதுவரை செலவிடப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிதி செலவிடப்பட்ட பணிகளும் அவற்றின் தற்போதைய முன்னேற்றமும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2025 நவம்பர் 28, வெள்ளிக்கிழமை
## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**